**Source:** *Tamil Murasu,* Front Page
**Date:** 17 March 2017

# ஆசியாவின் சிறந்த பல்கலைக்கழகமாக என்யுஎஸ் தேர்வு

தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக ஆசியாவின் சிறந்த பல்கலைக்கழகம் என்ற பெருமையைத் தக்கவைத்துக்கொண்டது சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் (என்யுஎஸ்).

‘டைம்ஸ் உயர்கல்வி ஆசிய பல்கலைக்கழகத் தரப்பட்டியல்’ நேற்று வெளியானது. 2013ல் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்ட இப்பிரிவில் கடந்த ஆண்டிலும் என்யுஎஸ் முதலிடம் பிடித்தது.

சென்ற ஆண்டில் சீனாவின் பீகிங் பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஆசியாவின் சிறந்த இரண்டாவது பல்கலைக்கழகமாக அடையாளப்படுத்தப்பட்ட நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், இவ்வாண்டுக்கான பட்டியலில் நான்காமிடத்திற்குச் சரிந்தது.

பீகிங் பல்கலைக்கழகம் இம்முறையும் இரண்டாமிடத்தைத் தக்கவைத்துக்கொண்டது. 2016ல் ஐந்தாம் இடத்தில் இருந்த மற்றொரு சீனப் பல்கலைக்கழகமான ‘ஷிங்குவா’ இம்முறை மூன்றாமிடத்திற்கு முன்னேறியது.

“கல்வியிலும் ஆய்வுப் பணிகளிலும் என்யுஎஸ் கொண்டுள்ள ஆசிய, அனைத்துலக அளவிலான அணுகுமுறைக்குக் கிடைத்துள்ள வலுவான அங்கீகாரம் இது. அத்துடன், நாட்டிலும் நம்மைச் சுற்றியுள்ள சமூகத்திலும் நேர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்த நாங்கள் கொண்டுள்ள முக்கியத்துவத்தையும் இது குறிக்கிறது,” என்றார் என்யுஎஸ் தலைமைப் பேராசிரியர் டான் சோர் சுவான்.

உலகின் சிறந்த பல்கலைக்கழகங்களில் 24வது இடத்தை என்யுஎஸ் பிடித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## சிறந்த நூறில் தமிழகத்தின் இரு பல்கலைக்கழகங்கள்

ஆசியாவின் சிறந்த நூறு ஆசியப் பல்கலைக்கழகங்கள் பட்டியலில் இந்தியாவைச் சேர்ந்த ஏழு கல்வி நிலையங்கள் இடம்பெற்றுள்ளன. பட்டியலில் ஆக உயர்நிலையாக 27வது இடத்தைப் பிடித்திருக்கிறது பெங்களூரில் அமைந்துள்ள இந்திய அறிவியல் கழகம் (IISc). ஐந்து இந்தியத் தொழில்நுட்பக் கழகங்களும் (IIT) முதல் நூறு இடங்களுக்குள் வந்துள்ளன.

தமிழகத்தைப் பொறுத்தவரை சென்னை ஆவடியில் அமைந்து இருக்கும் வேல்டெக் பல்கலைக்கழகம் (43ஆம் இடம்), ‘ஐஐடி-மெட்ராஸ்’ (62ஆம் இடம்) ஆகிய இரு கல்வி நிலையங்களும் முதல் நூறுக்குள் வந்துள்ளன.

இதில் வேல்டெக் பல்கலைக்கழகம் இதற்குமுன் இந்தப் பட்டியலில் இடம்பெற்றது கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

‘ஐஐடி -மெட்ராஸ்’ கடந்த ஆண்டிலும் இதே நிலையையே பிடித்திருந்தது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.